Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
THURSDAY, AUGUST 10, 2023

வியாழக்கிழமை ஓகஸ்ட் 10, 2023 | ஒளி: 09 கதிர்: 059 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

# பொது இணக்கப்பாட்டுடன் 13ஐ முன்னெடுப்போம்



நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்துக்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் பொது இணக்கப்பாட்டுடன் அதை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) ஆற்றிய விசேட உரையில் வலியுறுத்தினார்.

இதனை அடைவதற்கு திறந்த மனதுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி, பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



தமிழர்களின் விருப்பத்தை அறியும்

# சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசாங்கம் தயாரா?

## ஜனாதிபதிக்கு சிறிதரன் எம்.பி சவால்

தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா அல்லது சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா? என்பதை அறிய வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்ககளிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் தயாரா? என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ். சிறீதரன் ஜனாதிபதியிடம் நேரில் சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையிலான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையை தொடர்ந்து எழுந்து கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு சவால் விடுத்த நிலையில், அதற்கு ஜனாதிபதி பதிலளிக்கவில்லை.

தொடர்ச்சி P2

# யாழில் 33 சிறுவர்கள் போதைக்கு அடிமை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் கடந்த 2 மாத காலப்பகுதிக்குள் போதைக்கு அடிமையான 33 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று, யாழ்.மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற கூட்டத்தின் போதே அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் போதைக்கு அடிமையாகி வரும் நிலைமை அதிகரித்து வருகிறது. கடந்த 2 மாத காலப்பகுதிக்குள்ளேயே 33 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 11 பேர் ஹெரோய்ன் போதைப்பொருளுக்கும் 08 பேர் ஐஸ் போதைப்பொருளுக்கும், 07 பேர் கஞ்சா போதைப்பொருளுக்கும் ஏனையவர்கள் போதை மாத்திரைகளுக்கும் அடிமையாகி உள்ளனர்.

அதேவேளை, புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கும் அதிகளவான சிறுவர்கள் அடிமையாகி உள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

# 13 பிளஸில் மஹிந்த நிற்கிறார்



அதிகார பகிர்வு விடயத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் என்ற நிலைப்பாட்டில் இருந்தே செயற்படுகின்றார் என்றும், இதன்படி பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடுகள் சர்வகட்சி கூட்டத்தில் முன்வைக்கப்படும் என்றும் ஆளும் கட்சி பிரதம கொரடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையின் பின்னர், தனது கருத்தை முன்வைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# இனவாத மோதல்களை 13 மீண்டும் ஏற்படுத்தும்



13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான ஜனாதிபதியின் செயற்பாடுகள் மீண்டும் நாட்டில் இனவாத மோதல்களுக்கே கொண்டு செல்லும் என்று எதிர்க்கட்சியின் சுயாதீன அணியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையின் பின்னர், தனது கருத்தை முன்வைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# தனியாக பேச வேண்டும்



வடக்கு, கிழக்கைப் பொறுத்த வரை முஸ்லிம்கள் அங்கு முக்கிய பங்கு வகிப்பதால் முஸ்லிம் உறுப்பினர்களோடு தனியான பேச்சு வார்த்தையொன்றை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஜனாதிபதி வழங்க வேண்டும் என்று பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

அவ்வாறான பேச்சு வார்த்தையொன்றை முன்னெடுப்பதற்கு தாம் தயார் என்றும் வடக்கு, கிழக்கு மட்டுமன்றி அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளையும் இணைத்துக் கொண்டு அந்த பேச்சு வார்த்தையை நடத்த முடியும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# குறுக்கே நின்ற பாரவூர்தியை குடைசாய்த்தது அலுவலக ரயில்

மீரிகம வில்வத்தை ரயில் கடவையில், மீரிகமவிலிருந்து கிரிஉல்ல நோக்கி பயணித்த பாரவூர்தியின் இயந்திரம் திடீரென நின்றமையால், பொல்கஹாவெலயிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த அலுவலக ரயில் பாரவூர்தியை மோதித் தள்ளியது.

கொள்கலன் லொறி ரயில் கடவைக்குள் நுழைந்த போது, பாரவூர்தியின் இயந்திரம் திடீரென நின்றதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் சாரதி வாகனத்தை விட்டுச் வெளியேறியுள்ளதாகவும், காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



# பாறாளை அரச மரத்தின் ஆயுட்காலத்தை ஆராயவும்

■ நிதர்ஷன் வினோத்

சுழிபுரம் பறாளை முருகன் கோயிலின் தல விருட்சமான அரச மரத்தின் ஆயுட்காலத்தை தீர்மானிக்க விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி செய்து முறையற்ற விதமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெற நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் வாக்குறுதி அளித்துள்ளார்.

அத்துடன் விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளாமல் எப்படி வர்த்தகமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என்று தொல்லியல் திணைக்களத்திடம் விசாரணை நடத்தவும் உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# நியதி ஒதுக்கு விகிதம் குறைப்பு

அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபாய் வைப்பு பொறுப்புக்கள் மீதும் ஏற்புடைய நியதி ஒதுக்கு விகிதத்தை ஓகஸ்ட் 16ஆம் திகதி ஆரம்பிக்கின்ற ஒதுக்குப் பேணுகை காலப்பகுதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதத்துக்கு 200 அடிப்படை புள்ளிகளால் குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற கூட்டத்திலேயே நாணயச் சபையானது இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக மத்திய வங்கி, புதன்கிழமை (09) வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் தற்போதைய நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இணங்கும் வகையில்,

தொடர்ச்சி P2

# ‘9ஐயும் செய்யுங்கள் 13ஐ பின் பார்ப்போம்’

## தேர்தலை நடத்துமாறு சஜித் கோரிக்கை

மக்கள் ஆணைக்கு இடமளிக்க வேண்டும் என்றும் உடனடியாக மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 9 மாகாணங்களையும் இயங்கச் செய்து, அதன் உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி 13 ஆவது திருத்தத்தை செயற்படுத்தலாம் என்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையின் பின்னர்,

தொடர்ச்சி P2

# கடன் மறுசீரமைப்புக்கு எதிரான மனு தள்ளுபடி

உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை உயர்நீதிமன்றம், புதன்கிழமை (09) தள்ளுபடி செய்தது.

நிறுவனங்களுக்கு இடையிலான ஊழியர் சங்கத்தின் தலைவரும் ஜே.வி.பி.யின் முன்னாள் பராளுமன்ற உறுப்பினருமான வசந்த சமரசிங்க உள்ளிட்ட ஐவரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 46 பேர் மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் உத்தேச உள்ளூர் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளில், ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றிலிருந்து அரசாங்கம்பெற்ற கடன்களை குறைப்பதை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரியிருந்தனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை

# 3 நாள் ஒதுக்கப்பட்டது: எதிர்க்கட்சி எதிர்ப்பு



எதிர்வரும் மூன்று தினங்களில் பாராளுமன்றத்தில் நடைபெறவிருந்த விவாதத்தை இடைநிறுத்தி சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு உட்படுத்துவதற்கு ஆளும்கட்சி முன்வைத்த யோசனைக்கு எதிர்க்கட்சி மறுப்பு தெரிவித்தது.

ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கிழக்கு முஸ்லிம் சமூகம்

# மிஹிந்தலைக்குச் சென்று பேரணியில் பங்கேற்பு

■ ஏ.எச்.ஏ. ஹூஸைன்

மன்னாரில் இருந்து மாத்தளை வரை இடம்பெறும் மலையக மககளின் பேரணிக்கு கிழக்கிலும் வாழ்விட வாழ்வாதார உரிமை இழந்த முஸ்லிம் சமூகம் தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளதாக காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே. நிஹால் அஹமட் தெரிவித்தார்.

மலையக தோட்டத் தொழிலாளர்களாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட இந்தியத் தமிழ் மக்களின் இருநூறு வருடத்தை அனுஷ்டிக்கும்முகமாக இப்பேரணி இடம்பெற்று வருவதுடன், கடந்த 28ஆம் திகதழி தலைமன்னாரில்

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# இனவாத மோதல்களை 13 மீண்டும் ஏற்படுத்தும்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “ தற்போது ரணில் விக்கிரமசிங்க முன்வைக்கும் விடயங்களின் பாரதூர நிலைமையை சபையில் உள்ளவர்கள் புரிந்துகொண்டுள்ளார்களா என்று தெரியவில்லை.

நாட்டில் பொதுப் பிரச்சினைகள் உள்ளன. நிதி, கலாசார பிரச்சினைகள் உள்ளன. இவற்றை தீர்ப்பதற்கான இன விவகாரத்தை எடுக்க வேண்டாம். வடக்குக்கான அதிகாரம், தெற்கிற்கான அதிகாரம், கிழக்கிற்கான அதிகாரம், முஸ்லிம்களுக்கு அதிகாரம் அல்ல. மில்லியன் கணக்கில் முதலீடுகளை மாகாண சபைகளுக்கு கொண்டு வர முடியும் என்று கூறுகின்றார்.

இதன் ஆபத்துக்களை இந்த சபை சிந்திக்க வேண்டும் என்று கருதுகின்றேன். ஏதேனும் மாகாணத்திற்கென அவ்வாறு முதலீட்டை கொண்டு வர முடியாது. சீனாவை உதாரணமாக கூறியுள்ளீர்கள். அது தனி கட்சி நாடு. அங்குள்ள நிலைமை வேறு. அதனை இங்கே ஒப்பிட முடியாது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய சூழ்நிலை 50 வீதம் உள்ளது. மிகுதி 50 வீதத்தை நாடு முழுவதும் நிலவும் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு கண்டாலே தீர்க்க முடியும். இதனால் இந்த பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காண வேண்டும். அனைத்து இனத்தவர்களும் இணைந்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம்.

வடக்கிற்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் பிரச்சினைகள் தீர்ந்துவிட போகின்றதா? 13 ஆவது திருத்தத்தை வழங்கியதும் யுத்தம் முடிந்துவிடும் என்று நினைத்தனர். ஆனால் யுத்தம் நடைபெற்றது.

# பாறாளை அரச மரத்தின் ஆயுட்காலத்தை ஆராயவும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் தலைவர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வை சந்தித்து பறாளை முருகன் கோவில் விடயமாக பாராளுமன்ற வளாகத்தில் புதன்கிழமை (09) பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இந்த விவகாரம் பற்றி இருவரும் தனது கவனத்திற்கு கொண்டு வருவதற்கு முன்னர் இப்படி ஒரு பிரச்சனை நீடிப்பது தனது கவனத்திற்கு யாராலும் கொண்டுவரப்படவில்லை என்று ஜனாதிபதி குறித்த சந்திப்பில் குறிப்பிட்டார்.

பறாளை முருகன் கோவிலில் வரலாறு சுமார் 300 ஆண்டுகளுக்கு உட்பட்டது என்று குறிப்பிட்டு சம்பவத்தின் பின்னணியையும் வரலாற்று சுருக்கத்தையும் த.சித்தார்த்தன் எம்.பி விளக்கினார்.

இந்த மரம் 300 வருடங்கள் பழமையானது என்பதால் சங்கமித்தை இலங்கைக்கு 300 வருடங்களின் முன்னரே வந்தார் பௌத்தம் 300 வருடங்கள் மாத்திரமே பழமையானது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது இந்த மரம் சங்கமித்தை நாட்டிய மரமல்ல என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டனர்.

பறாளை முருகன் கோவிலின் தல விருட்சமான அரசமரம் சங்கமித்தை நாட்டிய மரமாக இருக்காது என்பது தனது அபிப்பிராயம் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, போர்த்துக்கேயர் இலங்கையை ஆண்டபோது நாட்டியிருந்த அரச மரங்களை எல்லாம் அழித்து விட்டதாகவும் மரத்தின் ஆயுட்காலத்தை அளவிடும் பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிடுவதாகவும் தெரிவித்தார்.

அந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரா வர்த்தமானி வெளியிடப்பட்டது எனவும் அப்படியான பரிசோதனை எதுவும் மேற்கொள்ளாமல் அது சங்கமித்தை நாட்டிய மரம் என்ற முடிவுக்கு எப்படி தொல்லியல் திணைக்களம் வந்தது எனவும் கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பினர்.

இதன் மூலம் அந்த வர்த்தமானி இனவாத நோக்கமுடைய சட்டபூர்வமற்ற வர்த்தமானி என்பது புலப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர்.

இதனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி தொல்லியல் திணைக்களம் எந்த விஞ்ஞானபூர்வ நடைமுறைகளையும் கடைப்பிடிக்காமல் எப்படி வர்த்தமானி வெளியிட்டார்கள் என்பது தொடர்பில் உடனடி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க தனது செயலாளர் சமன் எக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டார்.

# பொது இணக்கப்பாட்டுடன் 13ஐ முன்னெடுப்போம்

அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் எதிர்ப்பது என்ற பாரம்பரிய நடைமுறையில் இருந்து எதிர்க்கட்சிகள் விலகிச் செல்ல வேண்டும் என்று கோரிக்கை விடுத்த ஜனாதிபதி, முடிவெடுப்பதில் எதிர்க்கட்சிகளைக் கருத்தில் கொண்டு, சமத்துவமானதும், ஒத்துழைப்புடனான அரசியல் சூழலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நம்பகத்தன்மையுடனும், பொறுப்புடனும் பணியாற்றுவதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார். இந்த புதிய அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் புதிய பயணத்திற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளிலேயே நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தங்களின் தனிப்பட்ட வாத,விவாதங்களை தவிர்த்து நாட்டின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டின் நீண்ட கால நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் முடிவுகளை கூட்டாக எடுக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நேர்மையான ஒற்றுமை தேவை என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரம் போன்ற உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பது எந்த விதமான இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு கடினமானதாக அமையலாம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முதலில் ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வந்து நாட்டின் எதிர்காலத்திற்காக 13 ஆவது திருத்தத்தை கட்டம் கட்டமாக எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.



# சர்வஜன வாக்கெடுப்புக்கு அரசாங்கம் தயாரா?

அங்கு மேலும் தெரிவித்த அவர், ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு ஜனாதிபதியும் 13 ஆவது திருத்த விவகாரத்தை குழப்பகரமான சூழ்நிலைக்குள் கொண்டு வந்துள்ளார் என்பது தெளிவாக விளங்குகிறது.13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை பேசி நாட்டிலும் கட்சிகளிடத்திலும் குழப்பம் ஏற்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதி வெற்றி கண்டுள்ளார்.

இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஒன்று வரக் கூடாது என்பதே ஜனாதிபதியின் உரையை தொடர்ந்து உரையாற்றியவர்களின் கருத்துக்களாகவுள்ளன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண எத்தனை சிங்கள தலைவர்கள் தயாராக இருக்கின்றீர்கள்?

தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா, சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா என்பதை அறிய வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்ககளிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் தயாரா?

நீங்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டுதான் தமிழர்கள் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு செயற்படுவது மோசமானது. இனவாதத்தில் இருந்து வெளி வந்து நீதியான முறையில் செயற்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காணுங்கள். தயவு செய்து இவ்விடயத்தை குழப்பாதீர்கள்.

இந்த நாட்டில் தேர்தலும் நடக்காது, தீர்வும் வராது. நாட்டை குழப்பி விடும் முயற்சியில் தற்போதைய அரசாங்கமும் வெற்றி கண்டுள்ளது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்கினால் நாட்டை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் தமிழர்களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். இதனையே காலம் காலமாக நாங்கள் குறிப்பிட்டு வருகிறோம்” என்றார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, “அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நான் தயாராகவுள்ளேன், தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதை நான் அறிந்துள்ளேன். நீங்கள் என்னை சிங்கள இனவாதி என்று குற்றம்சாட்டுகின்றீர்கள் ஆனால் அத்துரலியே தேரர் எம்.பி. என்னை தமிழ் ஆதரவாளர் என்கிறார், அப்படியானால் நான் யார் ?

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரச்சினைகள் உள்ளது என்பதை நான் மறுக்கவில்லை. அரசியலமைப்பின் ஊடாகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்பதையே மீண்டும் வலியுறுத்துகிறேன்” என்றார்.

# குறுக்கே நின்ற பாரவூர்தியை ...

புதன்கிழமை (09) காலை ஏற்பட்ட விபத்து காரணமாக மலையக மற்றும் பிரதான மார்க்கங்களில் ரயில் போக்குவரத்து சில மணித்தியாலங்களாக தடைப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த அனைத்து ரயில்களும் இடையிடையே தரித்து நின்றதை அடுத்து, ரயில் மார்க்கத்தில் உள்ள இரட்டைப் பாதையில் ஒரு பாதை மாத்திரம் ரயில் சேவைக்காக திறக்கப்பட்டு தரித்து நின்ற 12 ரயில்களும் ஒவ்வொன்றாக ஒற்றைப் பாதையில் இயக்கப்பட்டன.

விபத்து காரணமாக பஸ்யால சந்தியில் இருந்து மீரிகம மற்றும் நெடுஞ்சாலை நுழைவாயில் நோக்கிய போக்குவரத்தும் நிறுத்தப்பட்டு பின்னர் வழமைக்கு திரும்பியது.

8 மணித்தியாலங்களின் பின்னர் விபத்து நடந்த இடத்தில் இருந்து ரயில் அகற்றப்பட்டதாக ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# ‘9ஐயும் செய்யுங்கள் 13ஐ பின் பார்ப்போம்’

தனது கருத்தை முன்வைத்து உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், “ அரசாங்கத்தை மக்கள் இறையாண்மை மற்றும் மக்கள் வாக்குகள் மூலமே அமைக்க வேண்டும். இந்நிலையில் இப்போது எந்தவொரு மாகாண சபையிலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அரசியல் துறையில் முன்னால் உள்ள பயிர்கள் என்று கூறினீர்கள். ஆனால் இந்த பயிர்கள் அனைத்தும் இறந்துவிட்டன.

தேர்தலுக்கு இடமில்லாமையே காரணமாகும். இப்போது தேர்தலுக்கு பயப்படுகின்றனர். இதனால் தயவு செய்து சர்வகட்சி கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை செயற்படுத்துங்கள்.

அரச தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளை முன்வைக்குமாறு கேட்டிருந்தோம். இப்போது உங்களின் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன்படி உங்களின் யோசனைகள் தொடர்பில் ஆராய்ந்து அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக எதனை செயற்படுத்தினாலும், தேர்தல் நடக்காமையினால் உள்ளூராட்சி துறைகளின் அதிகாரங்களும் மாகாண சபைகளின் அதிகாரங்களும் நிறைவேற்று அதிகாரமுடையவரிடமே உள்ளது.

நீங்கள் உங்கள் கட்சியில் 2, 3 பேர் இருப்பதாகவே கூறினீர்கள். ஆனால் உங்களை இந்த பாராளுமன்றத்தில் 132 பேரின் ஆதரவுடன் ஜனாதிபதியாகியுள்ளீர்கள். உங்களின் அமைச்சரவை உள்ளது. இதன்படி தேர்தலுக்கு இடமளிக்க வேண்டும்.

நாங்கள் எப்போதும் எதிர்க்கட்சியாகவே இருக்கப் போவதில்லை. நல்ல விடயங்களுக்கு ஆதரவளிப்போம். உங்களின் வரைபு தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்துவோம். இதன்படி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும்” என்றார்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, “இந்த அரசியலமைப்பு திருத்தத்தை தருகின்றேன். அதனை நிறைவேற்றுங்கள். சட்டங்களை நிறைவேற்றுங்கள். திருத்தங்களை கொண்டு வாரலாம். அவற்றை நிறைவேற்றிய பின்னர் தேர்தலை நடத்தலாம் என்று கூறியுள்ளேன். ஆபிரகாம் லிங்கன் போன்று இருக்குமாறு கூறினால் அவரை போலவும் இருக்கலாம்” என்றார்.

# 3 நாள் ஒதுக்கப்பட்டது: எதிர்க்கட்சி எதிர்ப்பு

அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மூன்று நாள் விவாதம் அவசியம் என்றும், ஆனால் தற்போது அது தேவையில்லை என்றும் தெரிவித்ததுடன், இந்த மூன்று நாள் விவாதத்தை உரிய நேரத்தில் கோருவதாக குறிப்பிட்டார்.

“தோட்ட சமூகத்தின் பிரச்சினைகளை விவாதிப்பதற்காக நாளை (இன்று) ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். மூன்று நாள் நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவோம். அந்த நேரத்தை நாங்கள் முடிவு செய்வோம்” என்று குறிப்பிட்டார்.

# 13 பிளஸில் மஹிந்த நிற்கிறார்

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாண சபைகளில் முதலமைச்சர்களாக பணியாற்றியவர்கள் இந்த பாராளுமன்றத்தில் இருக்கின்றனர். நாங்கள் மஹிந்த ராஜபக்‌ஷவின் தலைமையிலேயே இருக்கின்றோம். அவர் எப்போதும் ஒற்றையாட்சி நாட்டுக்குள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து மாகாண சபை முதலமைச்சர்களுக்கு அமைச்சரவைக்கு வந்து அமர்வதற்கான வாய்ப்பை அவர் வழங்கியிருந்தார்.

இதனால் மொட்டு கட்சியில் பிரிவு தொடர்பில் முயற்சித்தாலும் நாங்கள் அதிகார பகிர்வுக்காக கதைக்கின்றோம். 13 பிளஸ் தொடர்பிலேயே மஹிந்த பேசியிருந்தார். இதில் மறைக்க எதுவும் கிடையாது.

ஜனாதிபதி தலைமையில் நடக்கும் சர்வகட்சி கூட்டத்தில் எங்கள் நிலைப்பாடுகளை கூறுகின்றோம் என்பதுடன், மஹிந்த ராஜபக்‌ஷவின் அனுமதியுடனேயே இதனை கூறுகின்றேன்” என்றார்.

# தனியாக பேச வேண்டும்

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் மேலும் தெரிவித்த ரவூப் ஹக்கீம் எம்பி, அதிகாரப் பகிர்வு நல்லிணக்கம் உட்பட முக்கிய பல சிறந்த விடயங்களை முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் உரையாற்றினார். அது தொடர்பில் பிறிதொரு தினத்தில் விவாதம் நடத்த முடியும்.

சர்வ கட்சி மாநாடு தொடர்பில் தெரிவிக்கையில், சில கட்சிகள் அது தொடர்பான தப்பபிப்பிராயங்களை முன் வைப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். எவ்வாறாயினும் வடக்கு, கிழக்கு தொடர்பில் பேசும் போது முஸ்லிம் மக்கள் அங்கு முக்கிய பங்கினை வகிக்கின்றனர்.

அதனை கருத்திற்கொண்டு வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் தொடர்பில் முஸ்லிம் உறுப்பினர்களுடனும் தனியான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தை ஜனாதிபதி வழங்க வேண்டும்.

அதே வேளை, உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ள அரசாங்க ஊழியர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் நாம் ஏற்கெனவே பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

நாம் கட்சித் தலைவர்கள் என்ற வகையில் முன் வைக்கும் கோரிக்கை என்னவெனில், உள்ளூராட்சி சபை தேர்தல் நடைபெறும் வரை அவ்வாறு வேட்பு மனு தாக்கல் செய்துள்ள அரசாங்க ஊழியர்கள் அவர்களது கடமையை ஏற்கனவே அவர்கள் மேற்கொண்ட அலுவலகங்களில் முன்னெடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்றும் ரவூப் ஹக்கீம் எம்பி ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “வடக்கு , கிழக்கு மட்டுமின்றி அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் தயாராகவே உள்ளேன்” என்றார்.

# நியதி ஒதுக்கு விகிதம் குறைப்பு

வங்கித்தொழில் முறைமைக்குள் திரவத்தன்மையை உட்செலுத்தி, சந்தை திரவத்தன்மை பற்றாக்குறையை நிரந்தர அடிப்படையொன்றில் மேலும் குறைக்கும் நோக்குடன் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நியதி ஒதுக்கு விகிதத்தில் இக்குறைப்பானது ஏறத்தாழ 200 பில்லியன் ரூபாயைக் கொண்ட திரவத்தன்மையை உள்நாட்டு பணச் சந்தைக்கு விடுவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இது அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளின் நிதியங்களின் செலவில் ஏற்பட்ட குறைவின் விளைவாக சந்தைக் கடன்வழங்கல் வீதங்களில் மேலும் கீழ்நோக்கிய சீராக்கமொன்றை இயலச்செய்து, அதன்மூலம் பொருளாதாரத்திற்கு கொடுகடன் பாய்ச்சல்களில் விரிவாக்கத்திற்கு ஆதரவளிக்கும் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சந்தை கடன்வழங்கல் வீதங்கள் விரைவாக குறைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நியதி ஒதுக்கு விகித குறைப்பின் நன்மையை தாமதமின்றி அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகள் எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, மத்திய வங்கியானது சந்தை அபிவிருத்திகளை தொடர்ந்தும் கண்காணித்து தேவைப்படின் பொருத்தமான நிர்வாக வழிமுறைகளை எடுக்கும் என்று மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

# மிஹிந்தலைக்குச் சென்று பேரணியில் பங்கேற்பு

ஆரம்பித்த இப்பேரணி எதிர்வரும் சனிக்கிழமை மாத்தளை நகரில் முடிவடைகிறது.

மலையக மக்களின் வாழ்வுரிமைக்கான போராட்டத்தி;கு முழுமையான ஆதரவைத் தெரிவிக்கும் வண்ணம் கிழக்கு மாகாணத்திலும் தமது வாழ்விட காணி உரிமைகளை இழந்த முஸ்லிம் சமூக ஆர்வலர்கள் செயற்பாட்டாளர்கள் மிஹிந்தலை வரை சென்று பேரணியில் பங்குபற்றியிருப்பதாக நிஹால் அஹமட் மேலும் தெரிவித்தார்.

“மலையக எழுச்சிப் பயணம்” என்பது சக சகோதர பிரசைகளுடனான ஓர் உரையாடலாகும் என்றும் சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சக சகோதர பிரசைகள் மத்தியில் மலையகத் தமிழ் சமுதாயத்தின் வரலாறு, போராட்டங்கள், சாதனைகள், பங்களிப்பு, தற்போதைய சமூக பொருளாதார- அரசியல் அந்தஸ்து மற்றும் அபிலாஷைகள் ஆகியவை பற்றிய அடிப்படை மட்டத்திலான புரிதலை ஏற்படுத்துவதே இந்தப் பயணத்தின் இலக்காகும் என மலையக எழுச்சிப் பயண ஏற்பாட்டுக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பச்சிளம் சிசுவை பாதையில் வீசிய ஜோடி சிக்கியது

பிறந்த சிசுவை உடனடியாக வீதிக்கு கொண்டு வந்து, கொன்று வீசிய கணவன் மனைவியை முல்லேரியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண், பொலிஸ் பாதுகாப்பின் கீழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அக்குழந்தையின் தந்தையென கூறப்படும் நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

முல்லேரியா பண்டார மாவத்தை களனிமுல்ல தெருவில் உள்ள அவரது வீட்டில் செவ்வாய்க்கிழமை (8) இரவு சிசுவை பெற்றெடுத்துள்ளதுடன், சிசுவை கொலை செய்து, வீதியில் வீசியுள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இரத்தக் கறைகளைத் தொடர்ந்து சென்ற பொலிஸார், சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்குச் சென்று ஜோடியை கைது செய்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான கணவனும் மனைவியும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# “எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவதாக அமையக் கூடாது”

**பு.கஜிந்தன்**

தொல்லியல் திணைக்களத்தின் ஆய்வுகளும் ஆடையாளப்படுதல்களும் இந்த நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களினதும் கலாசார தொன்மைகளையும் வரலாறுகளையும் பேணிப் பாதுகாப்பதாக அமைய வேண்டுமே தவிர, எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவதாக அமையக் கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் (07.08.2023) இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே கடற்றொழில் அமைச்சர், தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்துள்ளார்.

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயம் உட்பட யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் 3, தொல்லியல் திணைக்களத்திற்கு உரிய பகுதியாக அண்மையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பகுதிகளை தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தும் செயற்பாடானது உரிய வழிமுறைகளை பின்பற்றப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருப்பதை தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில், அனைத்து மக்களும் கௌரவமான உரிமைகளை பெற்று வாழும் சூழலை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற சூழலில், குறுகிய நலன்களுக்காக சிலரினால் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான விடயங்கள் வேதனைக்குரியவை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட இணக்க அரசியல் என்பது, இருப்பவற்றை பாதுகாத்து முன்னோக்கி நகர்வதாகவும் பிரச்சினைகளை இலகுவாக தீர்ப்பதற்கான பொறிமுறையாகவும் இருக்க முடியுமே தவிர, தவறான நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமல் கடந்து செல்வதாக இருக்க முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

கடற்றொழில் அமைச்சரின் கருத்துக்களை அமைச்சரவை ஏற்றுக்கொண்ட நிலையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, குறித்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் அமைச்சரவைகளில் கலந்துரையாடி சரியான தீர்மானங்களை மேற்கொள்வதன் ஊடாக தவறுகள் இடம்பெற்று இருப்பின் திருத்திக் கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளார்.



# நிர்வாண புகைப்படம்: பெண் கைது

**ஷேன் செனவிரத்ன**

தனது கணவரின் சகோதரியின் நிர்வாண புகைப்படங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட பெண் ஒருவர் கண்டி கணினி குற்றத்தடுப்பு பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது நிர்வாண புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருவதாக கண்டி கணினி குற்றத்தடுப்பு பிரிவிற்கு குறித்த பெண் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய இந்த பெண் தனது நண்பர்கள் மத்தியில் வட்ஸ்அப் சமூக ஊடக வலையமைப்பின் ஊடாக நிர்வாண புகைப்படங்களை வெளியிட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகத்திற்கிடமான பெண் தனது மைத்துனருடன் சில காலமாக நல்லுறவில் இருந்து வந்ததாகவும் தற்போது கோபமடைந்து இவ்வாறு செய்ததாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் நேற்று (08) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தார்.


# ஐந்தாண்டு காதல் இரும்புக்கு இரையானது

**ரஞ்சித் ராஜபக்ஷ**

கண்டியில் இருந்து பதுளை நோக்கி பயணித்த இலக்கம் 20 சரக்கு ரயிலின் முன் பாய்ந்து யுவதியொருவர் புதன்கிழமை (09) காலை தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை டயகம பிரதேசத்தை சேர்ந்த கணபதி அனுஷா தர்ஷனி (வயது 28) என்ற யுவதியே புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த யுவதி ஹட்டன் நகரிலுள்ள தனியார் நிதி நிறுவனமொன்றில் பணிபுரிந்து வருவதாகவும் ஹட்டன் பொன்னகர் பிரதேசத்தில் வசிக்கும்



இளைஞன் ஒருவருடன் ஐந்து வருடங்களாக காதல் உறவில் ஈடுபட்டுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

பதுளை நோக்கி ஓடிக்கொண்டிருந்த புகையிரதத்தில் பாய்ந்து ஹட்டன் மல்லியப்பு பகுதியில் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட யுவதியின் சடலம் காதலனால் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா-கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

# விபத்தில் இளைஞன் பலி

**எம்.றொசாந்த், எஸ் தில்லைநாதன்**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் செவ்வாய்க்கிழமை (08) இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில்இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மன்னார் பகுதியைச் சேர்ந்த செபமாலை நிரோசன் (வயது 22) என்பவரே உயிரிழந்துள்ளார். இளைஞரின் சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 60 போதை மாத்திரைகளை வைத்திருந்தவர் கைது

**ராமு தனராஜா**

60 போதை மாத்திரைகளை தம்வசம் வைத்திருந்த குற்றஞ்சாட்டின் கீழ் 23 வயதான இளைஞன் பதுளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுமனதிஸ்ஸகம பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பசறை ஆககரத்தன்ன பகுதியில் முகாமிட்டுள்ள விஷேட அதிரடி படையினரின் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே இவ்விளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் பதுளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக விஷேட அதிரடி படையினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேக நபரை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# ஆணுறுப்பை காட்டிய அதிகாரிக்கு விளக்கமறியல்

**பாறுக் ஷிஹான்**

குடும்ப பெண்ணிற்கு ஆணுறுப்பை வட்அப்ஸ் செயலியின் ஊடாக காட்டி பாலியல் தொந்தரவு மேற்கொண்ட சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரை ஒகஸ்ட் 21 ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு கல்முனை நீதிமன்ற நீதவான் எம்.எஸ். எம் சம்சுதீன் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (8) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் பிரதான சந்தேக நபரான சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் வசிக்கின்ற 2 பிள்ளைகளின் தாயான குடும்ப பெண்ணிடம் தையல் மெசின் உட்பட பல சலுகைகளை பெற்று தருவதாக ஆசை வார்த்தைகள் கூறி தனது ஆணுறுப்பினை புகைப்படம் எடுத்து வட்ஸ் அப் செயலியின் ஊடாக குடும்ப பெண்ணின் கைத்தொலைபேசிக்கு தொடர்ச்சியாக அனுப்பி பாலியல் சேட்டை செய்து வருவதாக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு எதிராக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு கடந்த திங்கட்கிழமை (7) முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றிருந்தது.

# வவுனியா பண்ணை எவருக்கும் இல்லை

**க. அகரன்**

வவுனியா அரச விதை உற்பத்தி பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை என வடக்கு மாகாண ஆளுனர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா குடிமக்கள் பேரவை, வவுனியா அரச விதை உற்பத்தி பண்ணையை வேறுதேவைகளுக்கு பயன்படுத்துவதை தடுக்க கோரியும் அவ்வாறான திட்டமிருக்கும் பட்சத்தில் அதனை கைவிடுமாறும் வட மாகாண ஆளுனருக்கு கடிதம் மூலமாக தெரியப்படுத்தியிருந்தது.

இதற்கு பதிலளித்துள்ள உதவி காணி ஆணையாளர் க. சிவப்பிரியா வவுனியா அரச பண்ணையை எவருக்கும் கையளிக்கும் தீர்மானம் இல்லை என வடக்கு ஆளுனர் தெரிவித்துள்ளதாக குடிமக்கள் பேரவைக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

# 4 வீடுகளை உடைத்து திருடிய இருவர் கைது

**கனகராசா சரவணன்**

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இருதயபுரம் பிரதேசத்தில் 4 வீடுகளை உடைத்து சொத்துகளை திருடிவந்த இருவரை செவ்வாய்க்கிழமை (8) கைது செய்து திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில், இரவு பூட்டிய வீட்டையும் மற்றும் 3 வீடுகளிலும் கதவை உடைத்து நுழைந்து அங்கிருந்து தங்க ஆபரணங்கள், அலைபேசிகள் பணத்தை திருடியுள்ளதாக வீட்டின் உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது குறித்து மேற்கொண்ட விசாரணையில் நாவக்கேணியில் தலைமறைவாகி இருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.


# சடலங்களை அடையாளமிட்டு புதைக்குமாறு உத்தரவு

**ஆ.ரமேஸ்**

நுவரெலியாவில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த கணவன் மனைவியின் உடலங்கள் பாதுகாப்பான இடத்தில் அடையாளமிட்டு புதைக்கப்பட வேண்டும் என விசேட உத்தரவு பிறப்பித்த நுவரெலியா மாவட்ட நீதவான் நாலக்க சஞ்சீவ வீரசிங்க, சடலங்கள் புதைக்கப்படும் இடத்திற்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனை சட்ட வைத்தியர் ஒருவரின் ஊடாக மேற்கொண்ட பின் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்த நீதவான் இச் சம்பவம் தொடர்பான அறிக்கை மற்றும் சட்டவைத்தியரின் அறிக்கையை சம்பவம் தொடர்பான வழக்கில் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் பொலிஸார் சமர்பிக்க வேண்டும் எனவும், சம்பவ இடத்திற்கு வருகை தந்து மரண விசாரணை நடத்திய நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா நுழைவாயில் பகுதியான டொப்பாஸ் கிராமத்தில் உள்ளூர் தயாரிப்பான “கல்கட்டஸ்”துப்பாக்கி வெடித்து கணவன் மற்றும் மனைவி ஒரே வீட்டில் உயிரிழந்த சம்பவம் (07)



இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் நுவரெலியா டொப்பாஸ் கிராமத்தில் இலக்கம் (05) வீட்டில் வசித்து வந்த எண்டன் தாஸ் (வயது 31) மற்றும் நாதன் ரீட்டா (வயது 31) ஆகிய கணவன் மனைவி உயிரிழந்துள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பான விசாரணையை நுவரெலியா குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இச் சம்பவம் இடம்பெற்ற வேளையில் வீட்டில் இருந்த (சம்பவத்தில் உயிரிழந்த) எண்டன் தாஸ் என்பவரின் தாய் (வயது 54) இவரிடம் விசாரணை செய்த பொலிஸார் அவரின் வாக்கு மூலத்தை பதிவு செய்தனர்.

# “பொங்கலுக்கு பாதகம் செய்யோம்”

**சண்முகம் தவசீலன்**

குருந்தூர் மலையில் பொங்கல் நிகழ்வுக்கு பாதகமாக நடக்க மாட்டோம். தொல்பொருள் திணைக்களத்தினால் நீதிமன்றத்தில் உறுதி.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளையை மீறி அமைக்கப்பட்ட சட்டவிரோத விகாரை கட்டுமானம் தொடர்பில் இடம்பெறும் வழக்கு விசாரணையில் அண்மையில் இடம்பெற்ற பொங்கல் வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதமான சம்பவம் தொடர்பாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் முல்லைத்தீவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த விடயமாக இருந்த வழக்கு நகர்த்தல் பத்திர விசாரணை செவ்வாய்க்கிழமை (08)



மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகளின் பின்னர் சட்டத்தரணி தனஞ்சயன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

“குருந்தூர்மலை வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது.

கடந்த தவணையிலே பொங்கல் உற்சவம் ஒன்றினை ஆதிஐயனார் ஆலயத்திலே செய்ய முற்பட்ட வேளை தொல்லியல் திணைக்களத்தினாலும், சகோதர மொழி பேசுபவர்களாலும் தடுக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. அது தொடர்பாக நகர்த்தல் பத்திரம் ஊடாக அந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்கு நாங்கள் கொண்டுவந்தோம்.

அது பற்றி பதிலளிப்பதற்காக தொல்லியல் திணைக்களத்திற்கு தவணை வழங்கப்பட்டிருந்தது. தொல்லியல் திணைக்களம், சட்டமாஅதிபர் திணைக்களத்தினுடைய அரச சட்டத்தரணி ஊடாக தோன்றியிருந்தார்கள். தாம் எந்த விதத்திலும் அங்கே சைவ மக்கள் பொங்கல் பொங்கி வழிபட தடை செய்ய இல்லை என்றும், எதிர்காலத்திலும் அவ்வாறான பொங்கல் நிகழ்வு நடைபெற்றால் அதற்கு பாதகமாக நடக்க மாட்டோம் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆலய பரிபாலனசபை மக்கள் சார்பாகவும், ஊர்மக்கள் சார்பாகவும், முல்லைத்தீவு மாவட்ட சட்டதரணிகள் பலரும், ஜனாதிபதி சட்டத்தரணிகள் உள்ளடங்கலாக பல சிரேஸ்ட சட்டத்தரணிகள் ஆதிசிவன் ஐயனர் ஆலயம் சார்பாக இந்த வழக்கில் தோன்றியிருந்தார்கள். இது தொடர்பான மேலதிக கட்டளைக்காக இந்த வழக்கானது எதிர்வரும் 31.08.2023 க்கு நியமிக்கப்பட்டிருக்கின்றது” என்றார்.

# சூயிங்கம் போல ஊதிப் பெருப்பித்து உடைக்கும் முயற்சி

ஒருவகையான டொபி சுற்றப்பட்டிருக்கும் தாளை, மிக நீண்ட நீளத்துக்கு இழுப்பது யாரென பலரும் முயற்சிகளை மேற்கொண்டு இறுதியில் தோல்வியைத் தழுவியிருப்பர். இல்லையேல், ஓரளவுக்கு இழுபட்டு வரும்போது பக்கத்தில் இருப்பவர் வேண்டுமென்றே கிழித்துவிடுவார். எம்மில் சிலர் அது ஓர் அனுபவம்.

தற்காலத்தில், சூயிங்கத்தை வாயில் போட்டு நன்றாக மென்றுவிட்டு பெரியதாக முட்டையைப்போல ஊதிக்காட்ட பலரும் முயற்சிப்பர். சிலவேளைகளில் அந்த சூயிங்கம் கீழே விழுந்தால் மண் ஒட்டிக்கொள்ளும். எதற்குமே பிரயோசனமாய் இருக்காது. மீண்டும் மற்றுமொன்றை வாங்கி ஊதவே முயற்சிப்பர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின், அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பிலான முயற்சியும் ஊதிப் பெருப்பித்து உடைக்கும் முயற்சியாகவும், நீண்ட நீளத்துக்கு இழுத்து அறுத்துவிடும் முயற்சியாகவுமே இருக்கிறது என, பலரும் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

பாராளுமன்றத்தால் அங்கிகரிக்கப்பட்ட அரசியலமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்களை அமல்படுத்தாது, பாராளுமன்றத்துக்குள் மீண்டும் கொண்டு வந்ததன் ஊடாக இழுத்தடிக்கும் முயற்சியிலேயே ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார் என்பது தெளிவாகிறது.

மாகாணசபை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்து இடம்பெறவிருப்பதாகக் கூறப்படுகின்ற ஜனாதிபதித் தேர்தல் வரையிலும் 13ஆவது திருத்தத்தை இழுத்தடிக்கவே முயற்சிக்கப்படுகின்றது.

இன்றேல் தமிழ் மக்களின் வாக்குகளை அள்ளிக்கொள்ளும் முயற்சிக்கான காய்நகர்த்தலே முன்னெடுக்கப்படுகிறது என்பது தெட்டத்தெளிவாகவே தெரிகிறது.

அவ்வாறு இன்றேல், தனித்தனியாக கட்சிகளை அழைத்து பேச்சுக்களை நடத்தி, காலத்தை கடத்திச் செல்லாமல், அந்தந்த மாகாணங்களைச் சேர்ந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஒரு குடையின் கீழ், ஜனாதிபதி சந்தித்து இருக்கலாம்.

ஆக, தீர்வை உடனடியாக வழங்காது, நீண்டகாலம் இழுத்தடிப்புச் செய்து இறுதியில் கிடப்பில் போடும் கைங்கரியத்தையே ஜனாதிபதி மிகக் கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கின்றார் என்பது அம்பலமாகிவிட்டது.

ஜனாபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் புதன்கிழமை (09) உரையாற்றியதன் பின்னர், பலரும் பலதரப்பட்ட கருத்துக்களை முன்வைத்தனர். அதில், அத்துரலிய ரத்ன தேரர், ஜனாதிபதி தமிழ் மக்களுக்காக செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இதனிடையே, தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்று பிரித்துப் பிரித்து பேச்சுக்களை நடத்தாமல், ஓரணியில் அழைத்துப் பேச்சு நடத்தவேண்டுமென விமல் வீரவன்ச எம்.பி வலியுறுத்தினார். அதுவொரு நல்ல யோசனையென ஜனாதிபதி பதிலளித்தார்.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதி கையாளும் முறைமை முற்றிலும் பிழையானது. சகலரையும் அழைத்து பேசவேண்டும். இல்லையேல், அது பிச்சைக்காரனின் புண்ணாகவே இருக்கும். அந்தப் புண்ணை ஆற்றுவது என்பது குதிரை கொம்பாகவே இருக்கும். என்பதையும் நன்கு புரிந்துகொள்வது அவசியமாகும்.

நமது நாட்டை பொறுத்தவரையில், புரையோடிப்போய்யுள்ள பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படாமல் இருக்கின்றது என்பதை சகல தரப்பினரும் புரிந்துகொண்டு தீர்ப்போமென ஓரணியில் திரண்டால் மட்டுமே விடிவு கிடைக்கும் என்பதை மனதில் கொள்க. அதுவே வலியுறுத்தலாகும்.



## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# ராஜபக்ஷக்களை பிளக்கும் ரணில்!



புருஜோத்தமன் தங்கமயில்

தேர்தல் அரசியல் என்பது செந்நாய்களினால் நிரம்பியது. எந்த அடிப்படை நாகரீகத்துக்கும் தர்மத்துக்கும் அப்பாற்பட்டது. வெற்றிக்காக என்ன மாதிரியாக வேண்டுமானாலும் கீழிறங்கிச் செயற்படலாம் என்பது தேர்தல் அரசியலின் விதியாகிவிட்டது. சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் வீழ்ச்சி என்பது தேர்தல் வெற்றிக்கான என்ன ஆயுதத்தை வேண்டுமானாலும் பாவிக்கலாம், யாரை வேண்டுமானாலும் அழித்தொழிக்கலாம் என்று நினைத்த அரசியல்வாதிகளினால் நிகழ்ந்தது. இப்போதும் அந்தக் காட்சிகளே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

மலைக்காடுகளில் அதிகமாக வசிக்கும் செந்நாய்கள், வேட்டை இரையை, அது உயிரோடு இருக்கும் போதே உண்ணத் தொடங்கிவிடும். சிங்கம், புலி உள்ளிட்ட வேட்டை விலங்குகள் பெரும்பாலும் தன்னுடைய இரையை வேட்டையாடி அதன் உயிர் பிரிந்த பின்னரே, உண்ணத் தொடங்கும். ஆனால், செந்நாய்கள் இரையை உயிரோடே கடித்துக் குதறி உண்ணத் தொடங்கிவிடும். இரையாக மாட்டிக்கொண்ட மான்களோ, மாடுகளோ குற்றுயிராக கோரமாக குரல் எழுப்பிக் கொண்டிருக்கும். அது பற்றி செந்நாய்கள் கவலையே கொள்வதில்லை. அது, செந்நாய்களின் வேட்டை இயல்பு.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்த தயாரில்லாத அணிகளை பிளவுபடுத்தும் வேலைகளில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஈடுபட்டு வருகின்றார். ஏற்கெனவே, தமிழ்த் தேசியக் கட்சிகளை பிளவுபடுத்தும் வேலைகளை ரணில், ஜனாதிபதி தெரிவின் போதே தெளிவாக முன்னெடுத்திருந்தார். குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்திருந்த தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் கட்சிகளை இரண்டாக பிளப்பதில் அவர் வெற்றிபெற்றிருந்தார். கூட்டமைப்பு, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரை ஜனாதிபதி தேர்வின் போது ஆதரிப்பது என்ற முடிவை எடுத்தது. ஆனால், வாக்களிப்பின் போது, கூட்டமைப்பின் 4 உறுப்பினர்கள் ரணிலை ஆதரித்திருந்தார்கள். அதனை, பின்னராக கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையின் போதே ரணில் கூறவும் செய்தார். பத்து பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் ஜனாதிபதித் தேர்வைப் புறக்கணிக்க, 5 உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வேட்பாளரையும், ஏனைய நால்வரும் ரணிலை ஆதரித்தது என்பது, ஏற்கனவே முரண்பாடுகளோடு காணப்பட்ட கூட்டமைப்பை பிரித்தாள பெரிதும் காரணமானது.

இப்போது, ரணில் தான் யார் தோள்களில் ஏறி ஜனாதிபதி பதவிக்கு வந்தாரோ அவர்களின் காதைக் கடித்துத் துப்பிவிட்டு குருதியை உறிஞ்சும் வேலைகளில் ஈடுபட்டு வருவதாக தென் இலங்கை காட்சிகள் பிரதிபலிக்கின்றன. ராஜபக்ஷக்கள் இல்லையென்றால், ரணிலின் ஜனாதிபதிக் கனவு எப்போதுமே பலிக்காத ஒன்றாக இருந்திருக்கும். ராஜபக்ஷக்களுக்கு எதிராக மக்கள் வீதிக்கும் வந்தபோது, அதனைச் சமாளிப்பதற்காக ரணிலை ராஜபக்ஷக்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தினார்கள். ஆனால், ராஜபக்ஷக்களின் ஆசிர்வாதத்தோடு பதவியில் அமர்ந்த ரணில், இன்றைக்கு அவர்களின் பொதுஜன பெரமுனவை இரண்டாக பிளக்கும் வேலைகளில் எந்த தயவு தாட்சண்யங்களும் இன்றி ஈடுபட்டு வருகிறார். அதற்காக, பொதுஜன பெரமுனவுக்குள்ளேயே நிமல் லன்சாவை கண்டெடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களை இழுத்தெடுக்கும் வேலைகளில் ரணில் ஈடுபட்டு வருகிறார்.

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதியில் நடைபெறும் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அதற்கு முன்னராக, குறிப்பாக அடுத்த ஆண்டு ஜனவரியில் பொதுஜன பெரமுனவில் இருந்து குறைந்தது 50 பாராளுமன்ற உறுப்பினர்களை ஓர் அணியாக சேர்த்து புதிய கட்சியை அறிவித்துவிட வேண்டும் என்பதுதான் நிமல் லன்சாவுக்கு ரணிலால் கொடுக்கப்பட்டிருக்கும் நிகழ்ச்சி நிரல். அப்படி, 50 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட புதிய கட்சி உருவானால், அந்தக் கட்சியில் இருந்து புதிய பிரதமரை நியமித்துவிட்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்வது ரணிலின் வியூகம். தற்போது பிரதமராக இருக்கும் தினேஷ் குணவர்த்தன ராஜபக்ஷக்களின் விசுவாசியாக இருந்தவர். ஆனால், அவர் பிரதமர் பதவியைப் பெற்றுக் கொண்டதும் ரணிலோடு மிக இணக்கமாகிவிட்டார். ரணிலும் தினேஷும் பள்ளிக்கால நண்பர்கள். அந்த நட்பை இப்போது ஆட்சியிலும் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியான நிலையில், நிமல் லன்சாவின் அணியில் தினேஷும் இணைவதற்காக வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. அதன்மூலம் தான் தொடர்ந்தும் பிரதமர் பதவியில் இருக்கலாம் என்பது அவரது எண்ணம்.

ரணிலின் இந்த நகர்வு ராஜபக்ஷக்களை எரிச்சல் கொள்ள வைத்திருக்கின்றது. கடந்த வாரம், பஷில் ராஜபக்ஷ நேரடியாக ரணிலைச் சந்தித்து தன்னுடைய அதிருப்திகளை வெளியிட்டிருக்கிறார். அப்போது, தன்னை ஜனாதிபதி வேட்பாளராக பொதுஜன பெரமுன ஏற்காவிட்டால், பெரமுன உறுப்பினர்கள் தன்னை ஏற்பதாக சேர்ந்து வந்தால் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களின் நிலைப்பாட்டை நான் மதிப்பேன். மாறாக, என்னை வேட்பாளராக ஏற்காமல் இருப்பதால், பெரமுன வீழ்ச்சியுற்றால் அதற்கு நான் பொறுப்பில்லை என்றிருக்கிறார். இந்த விடயம் பஷிலை கோபப்படுத்த, நாங்கள் அளித்த ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு இவ்வாறு நடப்பது முறையல்ல என்றிருக்கிறார். அதற்கு, ரணில், ராஜபக்ஷக்களை நான்தான் காப்பாற்றினேன். நான் பதவியில் அமராது விட்டால், ராஜபக்ஷக்கள் வீதியிலேயே இறங்கியிருக்க முடியாது என்றிருக்கிறார். யாராக இருந்தாலும் தன்னுடைய தேர்தல் வெற்றிக்காக ஒத்துழைக்கவில்லை என்றால் அவர்களை எந்தவித தயவு தாட்சண்யங்களும் இன்றி தோற்கடிப்பதில் ரணில் குறியாக இருக்கிறார். அவர் ஒரு செந்நாயின் வேட்டைக் குணத்தைப் பிரதிபலிக்கிறார்.

கடந்த காலங்களில் ஆட்சி வரும் வரையில் அனைவரது கால்களிலும் விழுந்திருந்த ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வந்ததும் மற்றவர்களை ஒரு பொருட்டும் மதிக்காது, தூக்கியெறிந்த காட்சிகள் நிறைய உண்டு. அன்றைக்கு அவர்கள் செந்நாய்களாக வேட்டையாடினார்கள். இப்போது, அவர்கள் இரையாக மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பம் வந்திருக்கின்றது. பொதுஜன பெரமுனவில் இருந்து 50 பாராளுமன்ற உறுப்பினர்களை ரணிலால் சேர்த்துவிட முடியும் என்பது அவரது நம்பிக்கை. ஏற்கனவே ராஜபக்ஷக்களோடு முரண்பட்ட நிமல் லன்சா அணி சேர்ப்பதற்காக எந்த எல்லைக்கு வேண்டுமானாலும் செல்லக் கூடியவர் என்பது ரணிலுக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில், நிமல் லன்சா ராஜபக்ஷக்களின் முதல் ஆட்சிக் காலத்தில் அவர்களின் அம்பாக பாய்ந்தவர். ராஜபக்ஷக்களுக்கு எதிரான தரப்புக்களை சாம தான பேத தண்டங்களைக் கொண்டு அடக்குவதில் நிமல் லன்சா தன்னை நிரூபித்திருக்கிறார். அப்படிப்பட்ட வரலாற்றைக் கொண்ட ஒருவரை ரணில் இப்போது ராஜபக்ஷக்களுக்கு எதிராகவே திருப்பி விட்டிருக்கிறார்.

பெரமுனவில் இருந்து 50 உறுப்பினர்களை தனி அணியாக்கினால், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தும் கணிசமான உறுப்பினர்களை தன்னோடு இணைத்துக் கொண்டுவிடலாம் என்பது ரணில் நம்பிக்கை. ஏற்கனவே, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈபிடிபி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட கட்சிகள் ரணில் அணியில் இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கட்சிகளில் சி.வி.விக்னேஸ்வரனின் கட்சி ரணிலை ஆதரிக்க தயாராக இருக்கின்றது. பிளவுபட்டிருக்கின்ற கூட்டமைப்பில், தமிழரசுக் கட்சி ரணிலை ஆதரிக்கும் வாய்ப்புக்கள் இல்லை. ஆனால், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக ஒருங்கிணைந்திருக்கின்ற ரெலோ, புளொட் தரப்புக்கள் ரணிலை ஆதரிக்கும் சூழல் ஏற்படலாம். கொழும்பைப் பொறுத்தளவில் மனோ கணேசன், தற்போது வரையில் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால், அவர் தலைமை வகிக்கும் தமிழர் முற்போக்குக் கூட்டணியில் உள்ள பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்னன் உள்ளிட்ட தலைவர்கள், அவர்களின் தேர்தல் நலன் சார்ந்து முடிவெடுத்தால், சிலவேளை ரணிலை ஆதரிக்கும் சூழல் ஏற்படலாம். அப்படியான நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில், பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்து வந்த அணியுடன் தமிழ் முஸ்லிம் கட்சிகளையும் இணைந்துக் கொண்டு ரணில் பெரிய கூட்டணியொன்றை கட்டலாம். அதற்காக அவர் எந்த அடிப்படை அறத்துக்கும் அப்பால் நின்று செயற்படத் தயாராகியிருக்கின்றார்.

ராஜபக்ஷக்களைப் பொறுத்தளவில் இப்போது திருடனுக்கு தேள் கொட்டிய நிலையில் துடிக்கிறார்கள். ஏற்கனவே, ராஜபக்ஷக்களுக்குள் பிடுங்குப்பாடு உண்டு. மஹிந்த ராஜபக்ஷவையும் நாமல் ராஜபக்ஷவையும் வெட்டிவிட்டு, தான் பதவியில் அமருவதற்கான காய்களை பஷில் ராஜபக்ஷ நகர்த்த எண்ணினார். ஆனால், அவர் வெட்ட நினைத்த காய்களையெல்லாம் கூட ரணில் வெட்டிக் கொண்டிருக்கிறார். சிலவேளை, கட்சியைக் காப்பாற்றுவதற்காக பஷிலைப் புறந்தள்ளி ரணிலை ஆதரிக்கும் நிலைப்பாட்டிற்கு மஹிந்த இறுதி நேரத்தில் வரும் வாய்ப்புண்டு. அதுதான், அவரது அரசியல்வாரிசான நாமலின் அரசியல் வாழ்வைக் காக்க உதவும். ஆனாலும், தேர்தல் அரசியலில் வாக்குறுதிகளும் அறமும் அற்பக் காசுக்கும் பெறுமதியற்றது என்ற நிலையில், கடந்த காலங்களில் செந்நாயாக வேட்டையாடி ஓய்ந்த மஹிந்தவுக்கும் எதிர்காலம் குறித்த பயம் என்பது அதிகமாக இருக்கும். அது, நாட்டையோ மக்களையோ குறித்தது அல்ல, மாறாக, மகனின் எதிர்காலம் குறித்து.



## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கைகளைப் பாதுகாத்து, மனஉறுதியுடன் அழியாமல் வைத்திருங்கள். நல்லவைகளை நெஞ்சத்தில் இருத்தி, உரமேற்றுங்கள்.

முன்னேறும் பாதையில் நீங்களே உங்களை வழிநடத்திச் செல்லுங்கள். கண்டவர் பேச்சுகளை நம்ப வேண்டிய அவசியமில்லை. கேட்க வேண்டிய பெரியோரிடமே கேட்டு அறியவேண்டும். போராட்டமான வாழ்க்கை இதுவெனக் கலங்குதல் கூடாது.

எதிர்மறைக் கருத்துகளை சிலர் அள்ளி வீசுவார்கள். கண்டுகொள்ள வேண்டாம். எங்களுக்குள் முடிவு எடுக்கும் திறமை உண்டு. எங்களால் உருவாக்கும் திறமை மிகு கருமங்களை பிறர் தடுக்க முடியாது.

உங்களை நீங்களே நிர்வகித்துக் கொள்க. நீங்களே உங்களை ஆள்பவராவீர்கள். உங்களது செயல்களும் உங்களுக்கேயானது.

எந்த நற்செயல்களையும் செய்திட கடவுள் ஆசீகள் உண்டு. உங்களுக்குள் பிரவாகிக்கின்ற மகிழ்ச்சி நிலையே, உங்களுக்குள் ஒளியூட்டும்.

தற்செயலான இடையூறுகள் சாதாரணமானவை; நிரந்தரமானவை அல்ல. புரிந்து கொள்ளுங்கள் - உருவாக்குபவன் படைப்பாளி.

பல கருமங்களை உங்கள் மூலம் ஒழுங்காகச் செய்ய இறைவன் ஆணையிட்டுள்ளான். தொடர்ந்து கருமம் ஆற்றுங்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# மக்கள் கவலை



கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இயக்கச்சியில் சட்டவிரோத மணல் கொள்ளை தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடல் மட்டத்தில் இருந்து வெறும் ஒன்றரை மீற்றர் உயரமே கொண்ட இயக்கச்சி பிரதேசத்தின் ஆற்று சமவெளி பகுதிகளில் இருந்து தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான டிப்பர் லோட் மண் அகழப்பட்டு யாழ்ப்பாணத்தை நோக்கி கொண்டு செல்லப்படுவதாக கிராம மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மணல் அகழ்வை உடனடியாக தடுக்காவிட்டால் மிக விரைவில் இயக்கச்சி பிரதேசத்தின் நிலங்களும் உவராக மாற்றமடைந்து மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்படும் என தெரிவிக்கும் பொது மக்கள், குறித்த விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு விரைந்து குறித்த மணல் அகழ்வை தடுத்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

மு.தமிழ்ச்செல்வன்



# எய்ட்ஸ் தடுப்புக் கமிட்டி கூட்டம்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக கல்முனை பிராந்திய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.என்.எம். தில்ஸான், அம்பாறை மாவட்ட எய்ட்ஸ் கமிட்டி கூட்டத்தை கல்முனை பிராந்தி சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்திருந்தார்.

நூருல் ஹுதா உமர்





# நூல் வழங்கும் நிகழ்வு

திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு தம்பலகாமம் கோட்டத்தில் உள்ள பராசக்தி தமிழ்க் கலவன் பாடசாலை, இராமகிருஷ்ண மிசன் சாரதா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொன்றும் 1680 ரூபாய் விலையான ஞானோதயம் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் புதன்கிழமை (09) வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன், இவற்றை வழங்கி வைத்தார். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்,முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் வி.விஜயகுமார், க.பாலச்சந்திரன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

சஞ்சீவன்







# பரிசோதனை கண்காட்சி

மூதூர் வலயக்கல்வி அலுவலகத்தின் அனுசரணையில் தோப்பூர் கல்வி கோட்டம் நடாத்தும் சுற்றாடல் சார் பரிசோதனை கண்காட்சி தோப்பூர் பாத்திமா மகளிர் கல்லூரியில் புதன்கிழமை ( 09 ) இடம்பெற்றது.

இதில், தோப்பூர் கல்விக் கோட்டத்திலுள்ள 16 தமிழ், முஸ்லிம் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்குபற்றியிருந்தனர்.

தீஷான் அஹமட்

# நிதியுதவி

சம்மாந்துறை வலயத்திற்கான முன்னேற்ற மீளாய்வு கூட்டம், சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியில் வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தலைமையில் செவ்வாய்க்கிழமை(08) நடைபெற்றது.

மூன்று வகை ( type 3) பாடசாலைகளுக்கு இத்திட்டத்தை அமல் படுத்துவதற்காக 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

வி.ரி. சகாதேவராஜா





# இலக்கியப் போட்டிகள்

மட்டக்களப்பு நகர் மண்முனை வடக்கு பிரதேச செயலகம் பிரதேச மாணவர்களின் இலக்கிய ஆற்றலை ஊக்குவிக்கும் விதமான இலக்கியப் போட்டிகள் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 200 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கதை கூறல், கிராமிய பாடல், கவிதை பாடல், பாட்டு ஆகிய இலக்கியம் பயன்படுத்தப்படும் போட்டிகளில் தரம் 1 தொடக்கம் 11 வரையில் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மும்மொழிகளிலும் இடம்பெற்ற இந்நிகழ்வுகளை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர்கள் ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எம் எஸ் எம் நூர்தீன்



# காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைப்பு

தம்பிலுவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலக செயலாளர் ரீ.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திருக்கோவில் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரத்தை, பிரதேச செயலாளர் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதரிடம் வழங்கி வைத்தார்.

அபு அலா





# சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

ஊவா மாகாணத்தைச் சேர்ந்த 200 விவசாயிகளுக்கு GAP சான்றிதழ்கள் வழங்கும் அடையாள நிகழ்வு ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் புதன்கிழமை (09 ) வெளிமடை போகஹகும்புர பிரதேசத்தில் இடம்பெற்றது.

மேலும் 45,000 ரூபாய் மதிப்பிலான விவசாயத்திற்குப் பயன்படுத்தும் பொலித்தீன் பைகள், நீர் வழங்கல் கருவிகள், பூச்சி எதிர்ப்பு கவர் வலைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

எம்.செல்வராஜா

### காலி முகத்திடல் போராட்டமானது

# அபிலாஷைகளை நிறைவேற்றவில்லை

போராட்டக்காரர்கள் காலி முகத்திடலில் இருந்து வெளியேறி ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஆளுகை மற்றும் ஊழலை சரிசெய்வது அவசியம் என 51% மக்கள் கூறுகின்றனர்.

'அரகலய' (போராட்டம்) மக்களின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்ற வழிவகுத்தது என்று ஏறக்குறைய 60% மக்கள் நம்பவில்லை என்றே வெரிட்டே ரிசர்ச் நடத்திய புதிய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

2023 ஒகஸ்ட் 10 ஆம் திகதியன்று 'அரகலய' போராட்டக்காரர்கள் காலி முகத்திடலில் இருந்து வெளியேறி ஒரு வருடத்திற்குப் பிறகு, இலங்கையின் மறுகட்டமைப்புக்கு ஊழல் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியம் என்று 51% மக்கள் கருதுகின்றனர்.

2022 ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 10 ஆம் திகதி வரை,'அரகலய' காலி முகத்திடலில் குறிப்பிடத்தக்க இருப்பைத் தக்க வைத்துக் கொண்டது.

விருப்பங்கள் மற்றும் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டதா?

'அரகலய' மக்களின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்ற வழிவகுத்ததாக நீங்கள் நினைக்கிறீர்களா?' என்ற கேள்விக்கு, 60% பேர் 'பெரும்பாலும் இல்லை' என்றும், 11% பேர் 'பெரும்பாலும் ஆம்' என்றும், 29% பேர் 'அபிப்பிராயம் இல்லை' என்றும் பதிலளித்துள்ளனர்.

புதிய பிரதமர், அமைச்சரவை நியமனம் மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் என்பன இக்காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகளாகும்.

ஆட்சியா, ஸ்திரத்தன்மையா அல்லது பொருளாதார அமைப்பா?

பதிலளித்தவர்களிடம், 'பின்வரும் கூற்றுகளில், நீங்கள் எதை அதிகம் ஆதரிப்பீர்கள்?' என்றும் கேட்கப்பட்டது.

1. நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, ஜனநாயக அவகாசத்தை விட ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம்.

2. நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, ஊழல் மற்றும் மோசமான நிர்வாகத்தை சரிசெய்ய தீர்வு காண வேண்டும்.


3. நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, பொருளாதார அமைப்பை மாற்றுவது அவசியம்.

பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் - 51% - ஊழல் மற்றும் மோசமான நிர்வாகத்தை சரிசெய்ய வேண்டியது அவசியம் என்று நம்புகிறார்கள். 34% பேர் பொருளாதார அமைப்பில் மாற்றத்தை விரும்புகிறார்கள் மற்றும் 15% பேர் ஜனநாயக அவகாசத்தை விட ஸ்திரத்தன்மைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

## கணக்கெடுப்பு நடத்தப்பட்ட முறை


வான்கார்ட் சர்வே (பிரைவேட்) லிமிடட் வாக்குப்பதிவு பங்காளியாக செயல்படும் வெரிட்டே ரிசர்ச் உருவாக்கிய சிண்டிகேட்டட் கணக்கெடுப்பு (Syndicated Survey) கருவியின் ஒரு அங்கமாக இக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. வெரிட்டே ரிசர்ச்சின் சிண்டிகேட்டட் கணக்கெடுப்பு கருவியானது, இலங்கை மக்களின் உணர்வுகளை அளவிடுவதற்கான வாய்ப்பை மற்ற நிறுவனங்களுக்கும் வழங்குகிறது. 95% நம்பக இடைவெளி மற்றும் 3% வலு எல்லையை உறுதிசெய்யும் வகையில் இதன் மாதிரி மற்றும் வழிமுறைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன. 2023 ஜூன் மாதத்தில் தேசிய மட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த 1,008 வளர்ந்தவர்களின் சீரற்ற மாதிரியை இக் கருத்துக்கணிப்பு கொண்டிருந்தது.

**மக்களின் எதிர்பார்ப்புகள் 'அரகலய' மூலம் பூர்த்தி செய்யப்பட்டதாக நீங்கள் நினைக்கிறீர்களா?**




**பின்வரும் கூற்றுகளில், நீங்கள் எதை அதிகம் ஆதரிப்பீர்கள்?**

**நாட்டை மீள கட்டியெழுப்ப:**




95% நம்பக இடைவெளி மற்றும், ± 3% வழு எல்லையுடன் தேசிய மட்டத்தில் 1,008 வளர்ந்தவர்களின் சீரற்ற மாதிரியை இக் கருத்துக்கணிப்பு கொண்டிருந்தது. கருத்துக்கணிப்பு பங்காளர்: Vanguard Survey (Pvt) Ltd. மின்னஞ்சல்: syndicatedsurvey@veriteresearch.org

SYNDICATED SURVEYS by VR

# 2 ஆம் உலகப்போர் வெடிகுண்டு கண்டெடுப்பு

19 ஆம் நூற்றாண்டின் மத்தியில் 1939-லிருந்து 1945 வரை உலகின் பெரும்பாலான நாடுகள், ஆக்ஸிஸ் (Axis) மற்றும் அல்லீஸ் (Allies) என இரு அணிகளாக பிரிந்து நின்று போரிட்டன. இந்த பெரும் போர், இரண்டாம் உலக போர் என அழைக்கப்படுகிறது. இப்போரில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து 2.7 மில்லியன் தொன் வெடிகுண்டுகளை ஜெர்மனி கூட்டணி நாடுகள் மீது வீசின. அதில் பெரும்பகுதி ஜெர்மனி மீது வீசப்பட்டது. இவற்றில் பல வெடித்தாலும் ஒரு சில வெடிக்காமல் பூமியில் புதைந்தன. போர் முடியும் நேரத்தில் ஜெர்மனியின் பெரும்பாலான கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன அந்நாட்டில் இதனால் பல வெடிகுண்டுகள் பூமிக்கு அடியில் வெடிக்காமல் புதையுண்டு போனது. பல தசாப்தங்கள் ஆன பிறகும் ஆங்காங்கே அவற்றில் சில கண்டெடுக்கப்பட்டதாக அவ்வப்போது தகவல்கள் வருவதுண்டு.




ஜெர்மனியின் மேற்கு பகுதி நகரமான டஸ்ஸல்டார்ஃப் (Dusseldorf) பகுதியில் உள்ள ஒரு மிருககாட்சி சாலையில் இம்மாதம் முதல் வாரத்தில் 1 தொன் எடையுள்ள ஒரு வெடிகுண்டு கிடந்தது. இதனையடுத்து காவல்துறையும், வெடிகுண்டு நிபுணர்களும் இணைந்து அதனை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகளை திட்டமிட்டனர். இதன் ஒரு பகுதியாக, அந்த குண்டு கிடப்பதாக சொல்லப்படும் இடத்திற்கருகே சுமார் 1640 சதுர அடி சுற்றளவில் (500 meter radius) உள்ள இடங்களில் உள்ள அனைத்து மக்களையும் வெளியேறும்படி அதிகாரிகள் உத்தரவிட்டனர். இதனால் சுமார் 13 ஆயிரம் பேர் தற்காலிகமாக அந்த இடத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

அமெரிக்கா

## நாயுடன் கொஞ்சி விளையாடிய திருடன்

வீடுகளில் நாய் வளர்ப்பதற்கு முக்கிய காரணம் திருடர்களிடம் இருந்து வீட்டை காக்கும் என்பது தான். ஆனால் தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வரும் ஒரு வீடியோ அதற்கு நேர்மாறாக உள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திற்குட்பட்ட சாண்டியாகோ நகரில் ஒருவரின் வீட்டு கேரேஜூக்குள் விலை உயர்ந்த சைக்கிள்கள்



இருந்துள்ளனது. சம்பவத்தன்று இரவு வாலிபர் ஒருவர் அங்கு நுழைந்து ரூ.1.7 இலட்சம் மதிப்பிலான சைக்கிளை திருடி செல்ல முயன்றார். அப்போது உள்ளே இருந்த நாய் ஒன்று திருடனை நோக்கி வந்தது.

நாயை கண்டதும் திருடன் அங்கிருந்து செல்லாமல், வெளியே எடுத்த சைக்கிளை உள்ளே விட்டுவிட்டு அந்த நாயுடன் கொஞ்சி விளையாடினார்.

அப்போது அந்த நாயை பார்த்து அவர், 'ஐ லவ் யூ டூ' என்று கூறுகிறார். மேலும் நாயுடன் சிரித்து விளையாடுவது போன்ற காட்சிகளும் அங்குள்ள சி.சி.டி.வி கமெராவில் பதிவாகி உள்ளது.

ரஷ்யா

## 2 ட்ரோன்களை வீழ்த்திய ரஷ்யா

உக்ரைன் இரு ட்ரோன்களை ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவை நோக்கி ஏவியது. இவற்றை ரஷ்யாவின் விமானப்படை தாக்கி அழித்தது. மாஸ்கோவின் தெற்கு புறநகரில் உள்ள டொமோடிடோவோ (Domodedovo) பகுதியின் மீது ஏவப்பட்ட ஒரு டிரோனை ரஷ்யா இடைமறித்து வீழ்த்தியது. தலைநகரின் மேற்கு பகுதியில்



உள்ள மின்ஸ்க் நெடுஞ்சாலையின் மேலே இன்னொரு டிரோனை ரஷ்யா இடைமறித்து வீழ்த்தியது. வீழ்த்தப்பட்ட டிரோன்களின் பாகங்கள் தாக்கப்பட்டு காயமடைந்ததாகவோ அல்லது உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவோ இதுவரை தகவல்கள் இல்லை. ரஷ்யாவின் மாஸ்கோ நகரை குறிவைத்து ஒரே வாரத்தில் 3-வது முறையாக உக்ரைன் தாக்குதல் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

உத்தர பிரதேசம்

## டேட்டிங் ஆப் மூலம் பண மோசடி

உத்தர பிரதேச மாநிலம் கான்பூரில் தன்பாலின ஈர்ப்பாளர் டேட்டிங் ஆப் மூலம், ஆசைவார்த்தைகளை பரிமாறி, உறவுக்கு அழைத்து வீடியோ எடுத்து மோசடி செய்த கும்பலை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த கும்பல் Blued என்ற தன்பாலின ஈர்ப்பாளர் டேட்டிங் ஆப்-ல் போலி ஐடி உருவாக்கி, நட்பு அடிப்படையில சாட் செய்வார்கள். பின்னர், தன்பாலின உடலுறவில் விருப்பம் உள்ளதா? எனக்கேட்பார்கள். அப்படி விருப்பம் இருக்கிறது என சாட் செய்பவர்கள் விருப்பம் தெரிவித்தால், அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரச்சொல்வார்கள். அப்படி



வரும்போது, அவர்களுடன் உடலுறவு வைத்துக் கொள்வார்கள். அதை மற்றொருவர் மூலம் வீடியோ எடுத்துக் கொள்வார்கள். பின்பு அந்த நபரிடம் இருந்து விலையுயர்ந்த பொருட்களை கொள்ளை அடித்துவிடுவார்கள். மேலும், உடலுறவில் ஈடுபட்டதை வீடியோவாக படம் எடுத்து வைத்துள்ளோம். அதை சமூக வலைத்தளங்களில் பரப்பிவிடுவோம் என மிரட்டல் விடுத்து பணம் பறித்துக்கொள்வார்கள். இதனால் பாதிக்கப்பட்ட சிலர் பொலிஸார் புகார் அளிக்க, அதன்அடிப்படையில் பொலிஸார் இந்த மோசடி கும்பலை பிடித்துள்ளது. பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த மோசடியில் கைது செய்யப்பட்ட அனைவரும் 19 முதல் 21 வயதுடைய இளைஞர்கள் ஆவார்கள். அவர்களிடம் இருந்து பொலிஸார் ஐந்து அலைபேசிகள், மடி கணினி, வங்கி தன்னியக்க அட்டைகள் ஒன்பது ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

புதுடெல்லி

## 2ஆவது இந்திய ஒற்றுமை பயணம்

2024 பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, காங்கிரஸ் கட்சியை பலப்படுத்தும் நோக்கில் அக்கட்சியின் முன்னாள் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி, கடந்த ஆண்டு செப்டம்பர் 7-ந் திகதி தமிழ்நாட்டின் கன்னியாகுமரியில் இருந்து இந்திய ஒற்றுமை பயணத்தை ஆரம்பித்தார்.

இந்த யாத்திரை கேரளா, கர்நாடக, ஆந்திர உள்ளிட்ட 14 மாநிலங்கள் வழியாக பயணித்து, கடந்த ஜனவரி 30 ஆம் திகதி காஷ்மீரின் ஸ்ரீநகரில்



முடிவடைந்தது. இந்நிலையில், ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை பயணம் இரண்டு குஜராத் மாநிலத்தில் தொடங்கி வடக்கிழக்கு மாநிலமான மேகாலயாவில் முடிவுறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநில காங்கிரஸ் தலைவர் நானா படோல், செய்தியாளர்களை சந்தித்த போது இதை உறுதி செய்தார்.

எல்.பி.எல்:

# ஜஃப்னா கிங்ஸ் வென்றது

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் தொடரில், பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் உடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸைரக்கர்ஸ், பதும் நிஸங்கவின் 36 (35), லஹிரு உதாரவின் 29 (25), மொஹமட் நவாஸின் 27 (20), அணித்தலைவர் பாபர் அஸாமின் 24 (21), சாமிக கருணாரத்னவின் ஆட்டமிழக்காத 21 (18) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து



146 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், டுனித் வெல்லலாகே 3-0-9-2, டில்ஷான் மதுஷங்க 4-0-23-2, மகேஷ் தீக்ஷன 4-0-21-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 147 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ், நிஹ்சான் மதுஷ்கவின் 46 (32), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸின் 39 (21), அணித்தலைவர் திஸர பெரேராவின் 17 (07), தௌஹிட் ஹிரிடோயின் ஆட்டமிழக்காத 14 (09) ஓட்டங்களோடு 14.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் நசீம் ஷா 3.3-0-22-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக வெல்லலாகே தெரிவானார்.

இந்நிலையில் முன்னதாக நடைபெற்ற கோல் டைட்டான்ஸுடனான போட்டியில் பி-லவ் கண்டி வென்றது.

சிநேகபூர்வ போட்டியில்

## டொட்டென்ஹாமை வீழ்த்திய பார்சிலோனா

ஸ்பெய்னின் பார்சிலோனாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான சிநேகபூர்வ போட்டியி 4-2 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா வென்றது.



பார்சிலோனா சார்பாக, றொபேர்ட் லெவன்டோஸ்கி, பெரன் டொரஸ், அன்சு பாட்டி, அப்டெ எஸல்ஸூலி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஒலிவர் ஸ்கிப் பெற்றிருந்தார்.

இலங்கை கிரிக்கெட் நடுவர் போட்டிப் பரீட்சையில்

## சித்தியடைந்தவர்களுக்கு புலவர்மணியில் பாராட்டு

■ ஏ.எல்.எம். ஷினாஸ்

இலங்கை கிரிக்கெட் நடுவர் போட்டிப் பரீட்சையில் (தரம் 5) சித்தியடைந்த மருதமுனையை சேர்ந்த நடுவர்களை பாராட்டி கௌரவிக்கின்ற நிகழ்வு பெரியநீலாவணை புலவர்மணி சரிபுத்தீன் மஹா வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் ஏ.முஹம்மட் அன்சார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.



வட மாகாண ரீதியிலான 20 வயதுக்குட்பட்டோருக்கான தொடர்:

## சென். பற்றிக்ஸ் சம்பியன்

■ அஸ்ஹர் இப்றாஹீம்




இலண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையில் வட மாகாண ரீதியில் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திய 20 வயதுக்குட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் சென். பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனானது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரியை 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே பற்றிக்ஸ் சம்பியனானது.

இத்தொடரின் சிறந்த நாயகனாக- பற்றிக்ஸின் இணைத் தலைவரான ஏ.ஜே. ஜெறோம் தெரிவானார்.

மூன்றாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

## மே. தீவுகளை பந்தாடிய இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், கயானாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்ற இந்தியா தொடரைத் தக்க வைத்துக் கொண்டது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

மே. தீவுகள்: 159/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரண்டன் கிங் 42 (42), றொவ்மன் பவல் ஆ.இ 40 (19), கைல் மேயர்ஸ் 25 (20), நிக்கலஸ் பூரான் 20 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: குல்தீப் யாதவ் 3/28 [4], அக்ஸர் பட்டேல் 1/24 [4], ஹர்டிக் பாண்டியா 0/18 [3])

இந்தியா: 164/3 (17.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: சூரியகுமார் யாதவ் 83 (44), திலக் வர்மா ஆ.இ 49 (37), ஹர்டிக் பாண்டியா ஆ.இ 20 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 2/25 [4], றொஸ்டன் சேஸ் 0/28 [4])

போட்டியின் நாயகன்: சூரியகுமார் யாதவ்



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 10 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.